# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

---

*[1988 நவம்பர் மாதம் 09 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*வீ அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1988, நவம்பர் மாதம் 11 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 90 தபாற் செலவு : சதம் 75

## 1988, ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உள்ளூரதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

[1988, நவம்பர் மாதம் 09 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஒ. 59/88

குறித்த சில உள்ளூர் அதிகாரசபைகளின் உறுப்பினர்களது பதவிக் காலத்தை நீடிப்பதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்

குறித்த சில உள்ளூர் அதிகாரசபைகளுக்கான தேர்தல்களின் நோக்கத்துக்காக நியமனப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவாதலாலும் :

பொது ஒழுங்கமைதி காரணமாக அத்தகைய தேர்தல்களுக்கான வாக்கெடுப்பை பின்போடுவதற்கு, அவசியமானதாக வந்துள்ளதாதலாலும் :

இவ்வுள்ளூர் அதிகாரசபைகளினது உறுப்பினர்களின் பதவிக் காலங்களை நீடிப்பதற்கு இவ்வுள்ளூர் அதிகாரசபை இடப்பரப்புக்களில் உள்ளூராட்சிப் பணிகள் தொடர்ந்திருப்பதற்கும் மேலும் ஏற்பாடு செய்வதற்கும் 1987 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினுல் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாதலாலும் :

அத்துடன் இவ்வுள்ளூர் அதிகாரசபைகளின் பதவிக்காலத்தை மேலும் நீடிப்பது இப்பொழுது அவசியமானதாக வந்துள்ளதாதலாலும் :

ஆகவே, இப்பொழுது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினுல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

1. (1) இச்சட்டமானது 1988 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உள்ளூரதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் தவிர்ந்த அதன் ஏற்பாடுகள், இச்சட்டம் தொடங்குகின்ற தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகள். கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினுல் நியமிக்கப்படக்கூடியவாறுன அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

அபிவிருத்திச்சபைகளின் உறுப்பினர்களது பதவிக் காலத்தை நீடித்தல்.

2. ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தொன்பதாம் ஆண்டு சனவரி முதலாம் நாளுக்கு முற்போந்த தேதியன்று பதவி வகிக்கும் இச்சட்டத்துக்கான I ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்திச் சபை ஒவ்வொன்றினதும் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலமானது, 1989 சனவரி முதலாம் நாளிலிருந்து 1990 சனவரி ஓராந் தேதி வரை, அல்லது கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர், நியமிக்கக்கூடிய அத்தகைய முந்திய தேதிவரை இத்தால் நீடிக்கப்படுகின்றது.

சில மாநகர சபைகளினதும் நகர சபைகளினதும் உறுப்பினர்களின் பதவிக் காலத்தை நீடித்தல்.

3. (1) மாநகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 10 ஆம் பிரிவில் அல்லது அப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு 1987 மே 12 ஆம் தேதிய 453/4 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளையில் உள்ளது எது எப்படியிருப்பினும், 1989 சனவரி 1 ஆம் நாளுக்கு முந்திய நாளன்று பதவி வகிக்கின்ற இச்சட்டத்துக்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு மாநகர சபையினதும் உறுப்பினர்களின் பதவிக்காலம், 1989 சனவரி முதலாம் நாளிலிருந்து 1990 சனவரி முதலாம் தேதிவரை அல்லது கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய முந்திய தேதிவரை, இத்தால் நீடிக்கப்படுகின்றது என்பதுடன், அத்தகைய சனவரி முதலாம் நாள் அல்லது அவ்வாறு நியமிக்கப்பட்ட தேதி, மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, அத்தகைய ஒவ்வொரு சபைக்கும் தெரிவு செய்யப்படும் புதிய உறுப்பினர்களின் பதவிக்காலம் ஆரம்பமாகும் தேதியாதலும் வேண்டும்.

(2) நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 10 ஆம் பிரிவில் அல்லது அப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு 1987 மே 12 ஆம் தேதிய 453/4 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளையில் உள்ளது எது எப்படியிருப்பினும், 1989 சனவரி 1 ஆம் நாளுக்கு முந்திய நாளில் பதவி வகிக்கின்ற இச்சட்டத்துக்கான III ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு நகர சபையினதும் உறுப்பினர்களின் பதவிக்காலம் 1989 சனவரி முதலாம் நாளிலிருந்து 1990 சனவரி முதலாம் நாள் வரை, அல்லது கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடிய அத்தகைய முந்திய தேதிவரை இத்தால் நீடிக்கப்படுகிறது என்பதுடன், அத்தகைய சனவரி முதலாம் நாள் அல்லது அவ்வாறு நியமிக்கப்பட்ட தேதி, நகரசபை கட்டளைச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக அத்தகைய ஒவ்வொரு சபைக்கும் தெரிவுசெய்யப்பட்ட புதிய உறுப்பினர்களின் பதவிக்காலம் ஆரம்பமாகும் தேதியாதலும் வேண்டும்.

விசேட ஆணையாளர்கள் குறித்த சில பிரதேச சபைகளின் அலுவல்களை நிருவகித்தல்.

4. (1) ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 15 ஆம், இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும் 1987 மே 12 ஆம் தேதிய 453/4 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்டதுமான கட்டளையிலுள்ளது, எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்திற்கான IV ஆம் அட்டவணையிலும் V ஆம் அட்டவணையிலும் குறித்துரைக்கப்பட்ட பிரதேச சபை ஒவ்வொன்றினதும் பதவிக்காலம் 1990 சனவரி முதலாம் நாளன்று அல்லது கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய முந்திய தேதியன்று தொடங்குதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய சனவரி முதலாம் நாள் அல்லது அவ்வாறு நியமிக்கப்படும் தேதி, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, அத்தகைய சபை ஒவ்வொன்றினதும் பதவிக்காலம் தொடங்கும் தேதியாகவும் அக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறு 1989 சனவரி முதலாம் நாள் அல்ல என்றும் கருதப்படுதல் வேண்டும்.

(2) அமைச்சரானவர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் (உட்பிரிவு (1) இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறு) 1989 சனவரி முதலாம் நாளன்று தொடங்கி அத்தகைய சபையின் பதவிக்காலம் தொடங்கும் தேதியன்று முடிவடையும் காலப்பகுதியின் போது இச்சட்டத்திற்கான IV ஆம் அட்டவணையில் அல்லது V ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பிரதேச சபையின் அலுவல்களை நிருவகிப்பதற்கெனவும், அத்துடன், அந்நோக்கத்திற்காகவும், அக்கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமையவும், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின்கீழ் பிரதேச சபையினது அல்லது பிரதேச சபையொன்றின் தவிசாளரின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கெனவும், கடமைகளைப் புரிவதற்கெனவும் விசேட ஆணையாளர் ஒருவரை நியமிக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டத்தின் I ஆம் அட்டவணையில் அல்லது V ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பிரதேச சபையொன்றின் அலுவல்களை நிருவகிப்பதற்கு 1987 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, உள்ளூரதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்டவரும், 1988, திசெம்பர் 31 ஆம் தேதியன்று பதவி வகிப்பவருமான விசேட ஆணையாளர், 1989, சனவரி 1 ஆம் தேதி தொடங்குவதும் அத்தகைய சபையின் பதவிக்காலம் தொடங்கும் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது அத்தகைய பிரதேச சபையின் அலுவல்களைத் தொடர்ந்து நிருவகித்துவருதல் வேண்டும் ; அத்துடன் அந்நோக்கத்துக்காகவும் அக்கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமையவும், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின்கீழ் பிரதேச சபையொன்றின் அல்லது பிரதேச சபையொன்றின் தவிசாளரின் தத்துவங்களைத் தொடர்ந்து பிரயோகித்தலும் கடமைகளைத் தொடர்ந்து புரிதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்திற்கான IV ஆம் அட்டவணையில் அல்லது V ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பிரதேச சபையொன்றின் பதவிக்காலம் தொடங்குவதன்மீது அத்தகைய பிரதேச சபையானது, அத்தகைய பிரதேச சபையின் அலுவல்களை நிருவகிப்பதற்கென (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட விசேட ஆணையாளரை அடுத்துறுவதாக இருத்தல் வேண்டும்.

குறித்த சில உள்ளூர் அதிகார சபைகளுக்கான பெயர் நியமனங்கள் தொடர்பிலான விசேட ஏற்பாடு.

5. (1) (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் 35 ஆம் பிரிவில் அல்லது அப்பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட ஏதேனும் அறிவித்தலில் உள்ளது எது எப்படியிருப்பினும், தேர்தல்கள் ஆணையாளரானவர், இப்பிரிவானது நடைமுறைக்கு வரும் தேதியில் இருந்து இரண்டு கிழமைகளுக்குள்ளாக, எந்தத் தேர்தல் இடப்பரப்புத் தொடர்பில் பெயர்குறித்த நியமனப்பத்திரங்கள் எவையும் பெறப்படவில்லையோ அல்லது எந்தத் தேர்தல் இடப்பரப்புத் தொடர்பில் உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட முன்னைய பெயர்குறித்த நியமனக் காலப்பகுதிகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட எல்லாப் பெயர்குறித்த நியமனப் பத்திரங்களும் நிராகரிக்கப்பட்டுள்ளனவோ அந்தத் தேர்தல் இடப்பரப்பு ஒன்றாக

வுள்ளதான இச்சட்டத்துக்கான V ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப் பட்டுள்ள தேர்தல் இடப்பரப்பு ஒவ்வொன்றுக்கும் அந்தந்தத் தெரிவத் தாட்சி அலுவலர்களினால் எந்தக்காலத்திற்குள் பெயர்குறித்த நியமனப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படுமோ அந்தக் காலப்பகுதியொன்றைக் குறித்துரைக்கின்றதான அறிவித்தலொன்றைக் கசெற்றில் வெளியிடுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின் போது அத்தகைய ஏதேனும் தேர்தல் இடப்பரப்புகள் தொடர்பில் தெரி வத்தாட்சி அலுவலருக்கு எவையேனும் பெயர்குறித்த நியமனப்பத்திரங் கள் சமர்ப்பிக்கப்படுமிடத்து, உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதன்மீது ஏற்புடையனவாதல் வேண் டும். மறுபுறத்தில் ஏதேனும் தேர்தல் இடப்பரப்புத் தொடர்பில் அந்தக் காலப்பகுதிக்குள் பெயர்குறித்த நியமனப்பத்திரங்கள் எவையும் பெற் றுக்கொள்ளப்படாதவிடத்து அல்லது அத்தகைய ஏதேனும் தேர்தல் இடப்பரப்பு தொடர்பில் அந்தக் காலப்பகுதிக்குள் பெற்றுக்கொள்ளப் பட்ட பெயர் நியமனப்பத்திரங்கள் எல்லாம் நிராகரிக்கப்படுமிடத்து, அந்தக் கட்டளைச்சட்டத்தின் 35 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினதும் (3) ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## அட்டவணை I

(பிரிவு 2)

எந்த உறுப்பினர்களின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டதோ அந்த உறுப்பினர் களையுடைய அபிவிருத்திச் சபைகள்.

1. கொழும்பு அபிவிருத்திச்சபை
2. கம்பஹா அபிவிருத்திச்சபை
3. களுத்துறை அபிவிருத்திச்சபை
4. கண்டி அபிவிருத்திச்சபை
5. மாத்தளை அபிவிருத்திச்சபை
6. நுவரெலியா அபிவிருத்திச்சபை
7. காலி அபிவிருத்திச்சபை
8. மாத்தறை அபிவிருத்திச்சபை
9. அம்பாந்தோட்டை அபிவிருத்திச்சபை
10. அம்பாறை அபிவிருத்திச்சபை
11. குருணாகல் அபிவிருத்திச்சபை
12. புத்தளம் அபிவிருத்திச்சபை
13. அனுராதபுரம் அபிவிருத்திச்சபை
14. பொலன்னறுவை அபிவிருத்திச்சபை
15. பதுளை அபிவிருத்திச்சபை
16. மொனருகலை அபிவிருத்திச்சபை
17. இரத்தினபுரி அபிவிருத்திச்சபை
18. கேகாலை அபிவிருத்திச்சபை

## அட்டவணை II

(பிரிவு 3)

எந்த உறுப்பினர்களின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டதோ அந்த உறுப்பினர் களையுடைய மாநகரசபைகள்.

1. கொழும்பு மாநகரசபை
2. தெஹிவளை-கல்கிசை மாநகரசபை
3. நீர்கொழும்பு மாநகரசபை
4. கண்டி மாநகரசபை
5. காலி மாநகரசபை
6. குருணாகல் மாநகரசபை
7. பதுளை மாநகரசபை
8. இரத்தினபுரி மாநகரசபை.

## அட்டவணை III

(பிரிவு 3)

எந்த உறுப்பினர்களின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டதோ அந்த உறுப்பினர்களையுடைய நகரசபைகள்.

1. சீத்தாவக்கபுர நகரசபை
2. கொலன்னாவை நகரசபை
3. ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே நகரசபை
4. மொறட்டுவ நகரசபை
5. கம்பஹா நகரசபை
6. ஜாஎல நகரசபை
7. கட்டுநாயக்க–சிறுவை நகரசபை
8. மினுவாங்கொடை நகரசபை
9. பேலியகொடை நகரசபை
10. பேருவளை நகரசபை
11. ஹொரணை நகரசபை
12. களுத்துறை நகரசபை
13. பாணந்துறை நகரசபை
14. கம்பளை நகரசபை
15. கடுகன்னாவை நகரசபை
16. நாவலப்பிட்டி நகரசபை
17. வத்தேகம நகரசபை
18. அட்டன்–டிக்கோயா நகரசபை
19. தலவாக்கொல்லை-லிந்துல்ல நகரசபை
20. அம்பலாங்கொடை நகரசபை
21. மாத்தறை நகரசபை
22. அம்பாந்தோட்டை நகரசபை
23. தங்காலை நகரசபை
24. அம்பாறை நகரசபை
25. சிலாபம் நகரசபை
26. புத்தளம் நகரசபை
27. அனுராதபுரம் நகரசபை
28. பண்டாரவளை நகரசபை
29. அப்புத்தளை நகரசபை
30. கேகாலை நகரசபை.

## அட்டவணை IV

(பிரிவு 4)

எந்த உறுப்பினர்களின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டதோ அந்த உறுப்பினர்களையுடைய பிரதேச சபைகள்.

1. ஹோமாகம பிரதேச சபை
2. கடுவெல பிரதேச சபை
3. கெஸ்பாவ பிரதேச சபை
4. கொட்டிகாவத்த–முல்லேரியாவ பிரதேச சபை
5. மஹரகம பிரதேச சபை
6. சீத்தாவக்க பிரதேச சபை
7. அத்தனகல்ல பிரதேச சபை
8. திவுலப்பிட்டிய பிரதேச சபை
9. தொம்பே பிரதேச சபை
10. கம்பஹா பிரதேச சபை
11. ஜாஎல பிரதேச சபை
12. கட்டான பிரதேச சபை
13. களனி பிரதேச சபை
14. மகர பிரதேச சபை
15. மினுவாங்கொட பிரதேச சபை
16. மீரிகம பிரதேச சபை

17. அகலவத்த பிரதேச சபை
18. பண்டாரகம பிரதேச சபை
19. பேருவளை பிரதேச சபை
20. புளத்சிங்கள பிரதேச சபை
21. தொடங்கொட பிரதேச சபை
22. ஹொரணை பிரதேச சபை
23. களுத்துறை பிரதேச சபை
24. மத்துகம பிரதேச சபை
25. பாணந்துறை பிரதேச சபை
26. வலல்லவிட்ட பிரதேச சபை
27. அக்குரணை பிரதேச சபை
28. கங்கா இகல கோரளை பிரதேச சபை
29. ஹரிஸ்பத்துவ பிரதேச சபை
30. கண்டி நான்கு எல்லைகள்–கங்கவட்ட கோரலே பிரதேச சபை
31. குண்டசாலை பிரதேச சபை
32. மினிப்பே பிரதேச சபை
33. பன்வில பிரதேச சபை
34. பஸ்பாகேகோரலே பிரதேச சபை
35. பாத்ததும்பர பிரதேச சபை
36. பாத்தகேவாகெட்ட பிரதேச சபை
37. பூஜாபிட்டிய பிரதேச சபை
38. உடதும்பர பிரதேச சபை
39. உடபலாத்த பிரதேச சபை
40. யட்டிநுவர பிரதேச சபை
41. தம்புள்ள பிரதேச சபை
42. கலேவெல பிரதேச சபை
43. நாவுல பிரதேச சபை
44. பல்லேபொல பிரதேச சபை
45. ரத்தோட்டை பிரதேச சபை
46. யட்டவத்த பிரதேச சபை
47. ஹங்குரான்கெட்ட பிரதேச சபை
48. கொத்மலை பிரதேச சபை
49. வலப்பனை பிரதேச சபை
50. அக்மீமன பிரதேச சபை
51. அம்பலாங்கொட பிரதேச சபை
52. பத்தேகம பிரதேச சபை
53. பலப்பிட்டிய பிரதேச சபை
54. பெந்தோட்ட பிரதேச சபை
55. எல்பிட்டிய பிரதேச சபை
56. ஹபராதுவ பிரதேச சபை
57. ஹிக்கடுவ பிரதேச சபை
58. கரந்தெனிய பிரதேச சபை
59. லபடுவ பிரதேச சபை
60. நாகொட பிரதேச சபை
61. நெலுவ பிரதேச சபை
62. நியாகம பிரதேச சபை
63. தவலம பிரதேச சபை

64. யக்கலமுல்ல பிரதேச சபை
65. அக்குரஸ்ஸ பிரதேச சபை
66. தெவிநுவர பிரதேச சபை
67. டிக்வல்ல பிரதேச சபை
68. ஹக்மன பிரதேச சபை
69. கம்புறுப்பிற்றிய பிரதேச சபை
70. கெட்டிபொல பிரதேச சபை
71. மாலிம்பட பிரதேச சபை
72. பஸ்கொட பிரதேச சபை
73. தியகொட பிரதேச சபை
74. வெலிகம பிரதேச சபை
75. அம்பலந்தோட்டை பிரதேச சபை
76. பெலியத்த பிரதேச சபை
77. ஹம்பாந்தோட்டை பிரதேச சபை
78. லுனுகம்வேர பிரதேச சபை
79. திஸ்ஸமஹாராமய பிரதேச சபை
80. கிரகெட்டிய(பிரதேச சபை
81. வவுனியா தெற்கு (சிங்களம்) பிரதேச சபை
82. காத்தான்குடி பிரதேச சபை
83. அட்டாளைச்சேனை பிரதேச சபை
84. டமன பிரதேச சபை
85. கல்முனை பிரதேச சபை
86. கருங்கொடித்தீவு பிரதேச சபை
87. நிந்தாவூர் பிரதேச சபை
88. பொத்துவில் பிரதேச சபை
89. சம்மாந்துறை பிரதேச சபை
90. கந்தளாய் பிரதேச சபை
91. கிண்ணியா பிரதேச சபை
92. மூதூர் பிரதேச சபை
93. அளவுவ பிரதேச சபை
94. பிங்கிரிய பிரதேச சபை
95. கல்கமுவ பிரதேச சபை
96. கிரிபவ பிரதேச சபை
97. இப்பகமுவ பிரதேச சபை
98. கபைகன பிரதேச சபை
99. குருநாகல் பிரதேச சபை
100. மகவ பிரதேச சபை
101. நிக்கவெரட்டிய பிரதேச சபை
102. பொல்காவலை பிரதேச சபை
103. ரிடிகம பிரதேச சபை
104. ஆராச்சிக்கட்டு பிரதேச சபை
105. சிலாபம் பிரதேச சபை
106. கல்பிட்டிய பிரதேச சபை
107. நவகட்டேகம பிரதேச சபை
108. வனாத்தவில்லு பிரதேச சபை

109. கலேன்பிந்துனுவெவ பிரதேச சபை
110. ஹொரவபொத்தானை பிரதேச சபை
111. கஹட்டகஸ்திகிலிய பிரதேச சபை
112. கெப்பட்டிகொலாவ பிரதேச சபை
113. மதவாச்சி பிரதேச சபை
114. மிகிந்தலை பிரதேச சபை
115. நொச்சியாகம பிரதேச சபை
116. நுவரகம் பலாத்த (மத்திய) பிரதேச சபை
117. நுவரகம் பலாத்த (கிழக்கு) பிரதேச சபை
118. ரம்பெவ பிரதேச சபை
119. திரப்பென பிரதேச சபை
120. திம்புலாகல பிரதேச சபை
121. ஹிங்குராகொட பிரதேச சபை
122. லங்காபுரி பிரதேச சபை
123. தம்மன்கடுவ பிரதேச சபை
124. பண்டாரவளை பிரதேச சபை
125. எல்ல பிரதேச சபை
126. ஹாலிஎல பிரதேச சபை
127. மகியங்கனை பிரசேத சபை
128. பசறை பிரதேச சபை
129. ரிடிமலியாட்டி பிரதேச சபை
130. சொராந்தோட்டை பிரதேச சபை
131. ஊவா-பரணகம பிரதேச சபை
132. வெலிமடை பிரதேச சபை
133. படல்கும்புர பிரதேச சபை
134. புத்தள பிரதேச சபை
135. மொனறாகலை பிரதேச சபை
136. சியம்பலாந்துவ பிரதேச சபை
137. தனமல்வில பிரதேச சபை
138. அயகம பிரதேச சபை
139 எஹெலியகொட பிரதேச சபை
140. கலவான பிரதேச சபை
141. குருவித்தை பிரதேச சபை
142. பெல்மதுளை பிரதேச சபை
143. இரத்தினபுரி பிரதேச சபை
144. அரநாயக்கா பிரதேச சபை
145. தெஹியோவிற்ற பிரதேச சபை
146. தெரணியாகலை பிரதேச சபை
147. கலிகமுவ பிரதேச சபை
148. கேகாலை பிரதே சபை
149. மாவனெல்லை பிரதேச சபை
150. றம்புக்கனை பிரதேச சபை
151. ருவான்வெல்லை பிரதேச சபை
152. வறக்காப்பொல பிரதேச சபை
153. எட்டியாந்தோட்டைப் பிரதேச சபை.

## அட்டவணை V

(பிரிவு 5)

**பெயர் நியமனங்கள் எதுவும் பெறப்படாதனவான சபைகளின் நிரல்கள்.**

1. யாழ்ப்பாணம் மாநகர சபை
2. மட்டக்களப்பு மாநகர சபை
3. வல்வெட்டித்துறை நகரசபை
4. பருத்தித்துறை நகரசபை
5. சாவகச்சேரி நகரசபை
6. வவுனியா நகரசபை
7. சாவகச்சேரி பிரதேச சபை
8. நெடுந்தீவு பிரதேச சபை
9. ஊர்காவற்றுறை பிரதேச சபை
10. நல்லூர் பிரதேச சபை
11. பருத்தித்துறை பிரதேச சபை
12. வடமராட்சி (தென்மேற்கு) பிரதேச சபை
13. வலிகாமம் (கிழக்கு) பிரதேச சபை
14. வலிகாமம் (வடக்கு) பிரதேச சபை
15. வலிகாமம் (தெற்கு) பிரதேச சபை
16. வலிகாமம் (தென்மேற்கு) பிரதேச சபை
17. வலிகாமம் (மேற்கு) பிரதேச சபை
18. வேலணை பிரதேச சபை
19. கரச்சி பிரதேச சபை
20. பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
21. பூநகரி பிரதேச சபை
22. மன்னார் பிரதேச சபை
23. மாந்தை (மேற்கு) பிரதேச சபை
24. முசலி பிரதேச சபை
25. நானாட்டான் பிரதேச சபை
26. வவுனியா (வடக்கு) பிரதேச சபை
27. வவுனியா (தெற்கு தமிழ்) பிரதேச சபை
28. வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபை
29. மாந்தை (கிழக்கு) பிரதேச சபை
30. மரிற்றைம்பற்று பிரதேச சபை
31. புதுக்குடியிருப்பு பிரதேச சபை
32. துணுக்காய் பிரதேச சபை
33. ஏறூர்ப்பற்று பிரதேச சபை
34. கோறளைப்பற்று (வடக்கு) பிரதேச சபை
35. மண்முனை (தென்மேற்கு) பிரதேச சபை
36. மண்முனை (தெற்கு) எருவில்பற்று பிரதேச சபை
37. மண்முனை (மேற்கு) பிரதேச சபை
38. மண்முனை பிரதேச சபை
39. போரதீவுப்பற்று பிரதேச சபை
40. ஆலையடிவேம்பு பிரதேச சபை
41. திருக்கோயில் பிரதேச சபை
42. குச்சவெளிப் பிரதேச சபை.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 177 ; (வெளிநாடு) ரூபா 236 ; ஒவ்வோராண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.